# ADM COURT, SANKARANKOVIL

**தேதி 18.03.2024**

**அசல் வழக்கு எண். 115/2014**

**பி.வா.சா.1 மீண்டும் ஆஜர் சத்தியபிரமாணத்தின் பேரில் வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் பிள்ளைமார்பொது மகைமை சங்கத்தில் தலைவராக இருந்து வருகிறேன். நான் பிள்ளைமார் பொது மகைமை சங்கம் பதிவு எண்.3/2013 சங்கத்தின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வேறு எதாவது பிள்ளைமார் பொது மகைமை சங்கத்தின் தலைவராக நான் தேர்ந்தெடுக்கப்பட்டதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

2. வாதி கடை நடத்திவரும் வழக்கு சொத்து பிள்ளைமார் பொது மகைமை சங்கத்திற்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான். 1, 2 பிரதிவாதிகளுக்கும் எனக்கும் 4ம் பிரதிவாதிக்கும் இடையில் நிர்வாகி யார் என்பது குறித்த பிரச்சனை உள்ளது என்றால் சரிதான். பிள்ளைமார் பொது மகைமை சங்கத்திற்கு பாத்தியப்பட்ட கட்டிடங்களில் வாடகைக்கு இருப்பவர்களிடம் 1, 2 பிரதிவாதிகள் மற்றும் நானும், 4ம் பிரதிவாதியும் தங்களிடம் வாடகை செலுத்தும்படி கோரியதால்தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்பு பிள்ளைமார் பொது மகைமை சங்கத்திற்கு பாத்தியப்பட்ட சொத்தில் வாடகைக்கு இருந்து வரும் நபர்களை தங்களிடம் வாடகை செலுத்தும்படி நானும், 4ம் பிரதிவாதியும் கோரினோம் என்றாலும், அதேபோல் 1,2 பிரதிவாதிகளும் தங்களிடம் வாடகை செலுத்தும்படி கோரினார்கள் என்றாலும் அது சம்பந்தமாக காவல்நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டது என்றாலும், காவல்நிலைய விசாரணையில் நீதிமன்றம் மூலம் தீர்வு கண்டுகொள்ளுபடி

அறிவுறுத்தினார்கள் என்றாலும் சரிதான். மேற்சொன்ன காவல்துறை விசாரணை நடவடிக்கைக்குபிறகுதான் வாதிகளால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாதி வழக்கு சொத்தில் பிள்ளைமார் பொது மகைமை சங்கத்தில் வாடகைதாரராக இருந்து கடை நடத்திவருவதில் எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை.

3. 1,2 பிரதிவாதிகள் சங்கமான பதிவு எண்.3/2013 தென்காசி கூட்டுறவு மாவட்ட பதிவாளர் அவர்களிடம் பதிவு செய்யப்பட்டு நடைமுறையில் இருந்து வருகிறது என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. எனக்கு சொந்தஊர் கரிவலம்வந்தநல்லூர் கிராமம். 1,2 பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் எனக்கு சொந்த ஊர் அய்யனேரி கிராமம் என்றும், 4ம் பிரதிவாதி நடராஜனுக்கு பெரும்பத்தூர் கிராமம் என்றும் சொல்லியுள்ளார்கள் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. 1,2 பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரைக்கு இன்றுவரை நான் எந்த பதில் எதிர்வழக்குரையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

4. நானும், 4ம் பிரதிவாதியும் சேர்ந்து பிள்ளைமார் பொதுநலச்சங்கம் என்ற பெயரில் தென்காசி கூட்டுறவு மாவட்ட பதிவாளரிடம் ஒரு சங்கத்தை பதிவு செய்துள்ளோம் என்றால் சரியல்ல. காவல்நிலைய விசாரணையில் நாங்கள் மேற்சொன்ன பொதுநலச்சங்கத்தை பதிவுசெய்துள்ளதாக தெரிவித்து புகார் கொடுத்திருந்தோம் என்றால் சரியல்ல. வழக்கு சொத்து அமைந்துள்ள கட்டிடம் பிள்ளைமார் பொதுநலச்சங்கத்திற்கு பாத்தியப்பட்டது என்றும், அந்த கட்டிடத்தில் வாடகை உள்ள நபர்கள் பிள்ளைமார் பொது மகைமை சங்கத்திடம் எந்த தொடர்பும் வைத்துக்கொள்ளக்கூடாது என்றும், நான் தினசரி நாளிதழில் பொதுவிளம்பரம் கொடுத்திருந்தேன் என்றால் சரியல்ல. 1,2 பிரதிவாதிகளுக்கும், எனக்கும் இடையில் உள்ள பிரச்சனையானது பொது மகைமை சங்கத்தின் நிர்வாகி யார் என்பதை பொறுத்த பிரச்சனை என்றால் சரிதான்.

5. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.4 தீர்மானம் தாவா சொத்தை பொறுத்த சங்கத்தின் நிர்வாகியால் பிறப்பிக்கப்பட்ட தீர்மானம் இல்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.5 ஆவணமும் தாவா சொத்தை பொறுத்தும், தாவா சொத்தை பொறுத்த சங்கத்தின் நடவடிக்கை குறித்த ஆவணம் இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தை பொறுத்து வாடகை செலுத்தும்பட்சத்தில் வாடகை ரசீதின் அசல் வாடகை செலுத்துபவர்களிடமும் அதன் பிரதி நகல் வாடகை வசூல் செய்யும் நபர்களிடமும் இருக்கும் என்றால் சரிதான். நானும், 4 ம் பிரதிவாதியும் தாவா சொத்தை பொறுத்து வாதியிடம் எந்தவொரு வாடகை ஒப்பந்தமும் பிறப்பித்துகொள்ளவில்லை எற்னால் சரியல்ல. வாடகை ஒப்பந்தம் பிறப்பித்துகொண்டுள்ளோம். நான் சொல்லும் வாடகை ஒப்பந்தம் என்னிடம் உள்ளது. அதனை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். வாதி என்னிடமும், 4 ம் பிரதிவாதியிடமும் எந்த காலத்திலும் எந்தவொரு வாடகை ஒப்பந்தமும் பிறப்பித்துக்கொள்ளவில்லை என்றால் சரியல்ல. உண்மையில் வாடகை ஒப்பந்தம் இருந்திருந்தால் அந்த ஆவணத்தை வழக்கு விசாரணையின் ஆரம்பகாலத்திலேயே நான் தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல.

6. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.1 ரசீதுகள் அசல் பிரதி என்றால் சரிதான். அந்த ரசீதுகளில் என்னுடைய கையெழுத்து இல்லை என்றால் சரிதான். பொருளாளர் கையெழுத்து செய்துள்ளார். பி.வா.சா-ஆ.1 ரசீதுகளில் தலைவர்/செயலாளர் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும் அதில் யார் கையெழுத்து செய்துள்ளார் என்று குறிப்பிட்டு காண்பிக்கப்படவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 ரசீதுகள் வாதியால் செலுத்தப்பட்டிருந்தால் அந்த ஆவணங்கள் வாதியிடம் இருந்திருக்கும் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 ரசீதுகள் என்னால் கையெழுத்திடப்பட்ட ஆவணம் இல்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 ரசீதுகள் யாரால் யாருக்கு வழங்கப்பட்ட ஆவணம் என்று எனக்கு நேரடியாக

தெரியாது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.1 ஆவணம் வழக்கிற்கு தேவைப்படும் என்பதற்காக எங்களால் பிறப்பிக்கப்பட்ட ஆவணம் என்றால் சரிதான். வழக்கு சொத்தை காலி செய்யும்படி நாங்கள் வாதிக்கு எந்தவொரு முன்அறிவிப்பும் வழங்கவில்லை என்றாலும், அதற்கான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றாலும் முன் அறிவிப்பு வழங்கியுள்ளோம் ஆனால் அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. நானும், 4 ம் பிரதிவாதியும் மற்றும் நாங்கள் பொறுப்பாளராக இருக்கும் யாதொரு சங்கத்தின் மூலமாகவும் வாதிக்கு எந்தவொரு அறிவிப்பும் வழங்கவில்லை என்றால் சரியல்ல. நானும், 4 ம் பிரதிவாதியும் மற்றும் வேறு ஒரு சங்கத்தின் மூலமாக தனிப்பட்ட முறையில் வாதிக்கு இடையூறு செய்து வந்ததால் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்பு வழக்கு சொத்திற்கு 1,2 பிரதிவாதிகள்தான் வாதியிடமிருந்து வாடகை வசூல் செய்து வந்தார்கள் என்றால் சரிதான். வழக்கு சொத்தில் வாடகைதாரர் என்ற முறையில் வாதி முறையாக வாடகை செலுத்திவரும் நிலையில் வாதியை சட்டத்திற்கு முரணாக வழக்கு சொத்திலிருந்து காலி செய்யக்கூடாது என்றால் சரியல்ல. வாதி கோரிய பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**